



அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமீரக பள்ளிவாசல்களில்
வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜும்ஆ உரை

| | |
|---|---|
| வெளியிடு | ஐக்கிய அரபு அமீரக அரசின்<br>இஸ்லாமிய விவகார துறை<br>(http://www.awqaf.gov.ae) |

வெள்ளிக்கிழமை ரபியுல் ஆகிர் பிறை 12 ஹிஜ்ரி 1437
Friday of Rabiyul Akhir 12th Hijri 1437
22nd January 2016

| | |
|---|---|
| தலைப்பு: | நேர்மை! |



| | |
|---|---|
| தமிழில் | மௌலவி, அப்சலுள் உலமா<br>புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.<br>Contact No. +971529919346 & Email : abusalih100@gmail.com<br>w w w . s u n n a t h w a l j a m a t h . c o m |



*இந்த உரையை ஒலி-ஒளி வடிவில் கேட்க +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்() மெசேஜ் அனுப்பவும். குரூப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.*

| தலைப்பு: | நேர்மை! |
|---|---|

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன்தான் அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து தகுந்த முறையில் பக்குவப்படுத்துகிறான். அவனுடைய திருப் பெயர்கள் மிகவும் மேன்மை வாய்ந்தது. அவனுடைய தன்மைகள் மிகவும் பரிசுத்தமானது. உள்ளங்களை படைத்து அதனை மிக சீராக வைத்திருக்கும் அவன் மிகவும் பரிசுத்தமானவன். அந்த உள்ளத்தை யார் தூய்மையாக வைத்திருக்கிறாரோ அவருக்கு வெற்றிகளை வழங்குவதாக இறைவன் வாக்களிக்கிறான். பரிசுத்த நாயனான அவனை உரிய முறையில் புகழ்கிறேன்.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

கவனமாக கேளுங்கள்! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(24:52)

وَمَنْ يُطِعِ اللَّهَ وَرَسُولَهُ وَيَخْشَ اللَّهَ وَيَتَّقْهِ فَأُولَئِكَ هُمُ الْفَائِزُونَ

“எவர்கள் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கட்டுப்பட்டு, அல்லாஹ்வுக்குப் பயந்து (அவனுக்கு மாறு செய்வதை விட்டு) விலகிக் கொண்டார்களோ அத்தகையவர்தாம் நிச்சயமாக பெரும் பாக்கியம் பெற்றவர்கள்”

**முஸ்லிம்களே**! நிச்சயமாக இந்த இஸ்லாமிய மார்க்கம் உயர்தரமான நற்குணங்களை கொண்டதாகும். நியாயமான அறிவுரைகளை கொண்ட மார்க்கம், மேன்மையான நடவடிக்கைகள் உள்ள மார்க்கமாகும். ஏற்றமான குணநலன்களை கடைப்பிடித்து வர வேண்டும் என்றும், அத்தகைய நற்குணங்களை தொடர்ந்து நடைமுறை படுத்த வேண்டும் என்றும் இஸ்லாமிய மார்க்கம் நம்மை ஆர்வமூட்டுகிறது. இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:



www.sunnathwaljamath.com

إِنَّ اللَّهَ كَرِيمٌ يُحِبُّ الْكَرَمَ وَمَعَالِيَ الأَخْلاَقِ، وَيَكْرَهُ سَفْسَافَهَا

“நிச்சயமாக அல்லாஹ் கண்ணியமானவன் கண்ணியம் செய்வதையும் உயரிய நற்குணங்களையும் விரும்புகிறான். அநாகரீகமான குணங்களை வெறுக்கிறான்” (الحاكم في المستدرك: 151)

நேர்மையாக இருப்பது விலை மதிப்பில்லா நற்குணமாகும். நேர்மை என்றால் நல்ல எண்ணங்கள் உள்ளத்தில் நிறைந்திருக்க வேண்டும், அதன் மூலம் செயலும் நல்லவிதமாக அமைய வேண்டும். அதனைத் தொடர்ந்து அழகிய அணுகுமுறை ஏற்படும். இதுவே இந்த குணத்தின் முக்கிய இயல்பாகும். நேர்மை எனும் குணம் நற்குணங்களிலேயே மிகவும் அழகிய மற்றும் முழுமையான குணமாகும். நேர்மையின் பொருள்: தீய எண்ணத்தை விட்டு தூர விலகி இருக்க வேண்டும். குறைகளை விட்டு தவிர்ந்திருக்க வேண்டும்.

நேர்மையாகவும், நியாயமாகவும் நடப்பதில் இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அழகிய முன்மாதிரியாக திகழ்கிறார்கள். நேர்மையான வாழ்வியல் கலையை கற்றுக் கொடுக்கிறார்கள்.

فَقد قَالَ جَابِرُ بْنُ عَبْدِ اللَّهِ رَضِيَ اللَّهُ عَنْهُمَا: كُنْتُ مَعَ النَّبِيِّ صلى الله عليه و سلم فِي سَفَرٍ، فَتَعِبَ جَمَلِي، فَلَحِقَنِي رَسُولُ اللَّهِ صلى الله عليه و سلم وَدَعَا لَهُ، فَضَرَبَهُ، فَسَارَ سَيْرًا لَمْ يَسِرْ مِثْلَهُ، فَقَالَ:بِعْنِيهِ بِوُقِيَّةٍ. قُلْتُ: لَا. قَالَ:بِعْنِيهِ. فَبِعْتُهُ بِوُقِيَّةٍ، فَلَمَّا بَلَغْنَا الْمَدِينَةَ أَتَيْتُهُ بِالْجَمَلِ، وَابْتَغَيْتُ ثَمَنَهُ، ثُمَّ رَجَعْتُ فَأَرْسَلَ إِلَيَّ، فَقَالَ:أَتُرَانِي إِنَّمَا مَاكَسْتُكَ . أَيْ نَقَصْتُ الثَّمَنَ . لِآخُذَ جَمَلَكَ؟ خُذْ جَمَلَكَ وَدَرَاهِمَكَ

ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் தன் வாழ்வில் நடந்த இந்த சம்பவத்தை அறிவிக்கிறார்கள்: நான் (ஒரு பயணத்திலிருந்து திரும்பு கையில்) நன்றாக இயங்காதிருந்த எனது ஒட்டகத்தில் சென்றுகொண்டிருந்தேன். அதற்கு ஓய்வு கொடுக்க நான் எண்ணியிருந்தேன். அப்போது என்னிடம் வந்து சேர்ந்த நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எனக்காகப் துஆச் செய்தார்கள்; எனது ஒட்டகத்தை அடித்தார்கள். அது முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு (மிக வேகமாக) ஓடியது. பிறகு நபிகள் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "இ(ந்த ஒட்டகத்)தை ஓர் "ஊக்கியா"வுக்கு எனக்கு விற்றுவிடு" என்று கேட்டார்கள். நான் "இல்லை" என்றேன். பிறகு (மீண்டும்) "இதை எனக்கு விற்றுவிடு" என்று கேட்டார்கள். நான் ஓர் "ஊக்கியா"வுக்கு அதை விற்றேன்; ஆனால், என் வீட்டாரிடம் போய்ச் சேரும்வரை அதில் பயணம் செய்துகொள்வதற்கு என்னை அனுமதிக்க வேண்டும் என்று நிபந்தனையிட்டேன். (அவர்களும் அந்த நிபந்தனையை ஏற்றார்கள்.) நான் (மதீனாவுக்கு) வந்து சேர்ந்தபோது, அந்த ஒட்டகத்தை இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் (ஒப்படைக்க) கொண்டுசென்றேன். அவர்கள் அதன் விலையை எனக்குக் கொடுத்தார்கள். பிறகு நான் திரும்பிச் சென்றபோது,

எனக்குப் பின்னாலேயே இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆளனுப்பி (என்னை மீண்டும் அழைத்து), "உனது ஒட்டகத்தை நான் எடுத்துக்கொள்வதற்காக அதன் விலையை நான் குறைத்து விடுவேன் என நீ எண்ணிக்கொண்டாயா? (என்னிடம் தர வேண்டிய) உனது ஒட்டகத்தையும், உனக்குச் சேர வேண்டிய வெள்ளிக் காசுகளையும் நீயே எடுத்துக்கொள். அது உனக்குரியதுதான்" என்றார்கள். (متفق عليه)

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மற்றவர்களுடைய பொருட்களில் மிகவும் நேர்மையாகவும், நியாயமாகவும் நடந்து கொண்டார்கள். உரிமை இல்லாமல் மற்றவர்களுடைய பொருளை சிறிய அளவில் பயன்படுத்தினாலும் அது நேர்மையாகாது. இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன்னுடைய சஹாபாக்கள் ரலியல்லாஹு அன்ஹும் அவர்களுக்கும் இத்தகைய நேர்மையின் துல்லியமான பண்பையும் கற்றுக் கொடுத்துள்ளார்கள். எனவே அவர்களும் தனித்தன்மையோடு நேர்மை எனும் குணத்தை கடைபிடித்தார்கள்.

خُذْهُ، إِذَا جَاءَكَ مِنْ هَذَا الْمَالِ شَيْءٌ، وَأَنْتَ غَيْرُ مُشْرِفٍ وَلاَ سَائِلٍ، فَخُذْهُ، وَمَا لاَ فَلاَ تُتْبِعْهُ نَفْسَكَ

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எனக்கு அன்பளிப்புச் செய்யும் வழக்கமுடையவர்களாக இருந்தார்கள். “என்னை விட ஏழைக்கு இதை கொடுங்களேன்” என்று நான் சொல்வேன். அதற்கு இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், “இதை வாங்கிக் கொள்ளும்; நீர் பிறரிடம் கேட்காமலும் பேராசை கொள்ளாமலும் இருக்கும்போது இவ்வாறு வரும் பொருட்களைப் ஏற்றுக்கொள்ளும். ஏதும் கிடைக்கவில்லை என்றாலும் அப்பொருட்களுக்குப் பின்னால் உம்முடைய மனதைத் தொடரச் செய்யாதீர்! (அது கிடைக்க வேண்டும் என்ற எண்ணம் கொள்ள வேண்டாம்)" என்றார்கள். இந்த நிகழ்வை உமர் இப்னு கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள். (متفق عليه)

ஹகீம் இப்னு ஹிஸாம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பின்வரும் நிகழ்வை அறிவிக்கிறார்கள்: நான் இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் (உதவி) கேட்டேன். அவர்கள் எனக்கு வழங்கினார்கள்; மீண்டும் (உதவி) கேட்டேன் வழங்கினார்கள். மீண்டும் கேட்டேன்; வழங்கிவிட்டு, பின்வருமாறு இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்:

يَا حَكِيمُ إِنَّ هَذَا الْمَالَ خَضِرَةٌ حُلْوَةٌ، فَمَنْ أَخَذَهُ بِسَخَاوَةِ نَفْسٍ بُورِكَ لَهُ فِيهِ، وَمَنْ أَخَذَهُ بِإِشْرَافِ نَفْسٍ لَمْ يُبَارَكْ لَهُ فِيهِ كَالَّذِي يَأْكُلُ وَلاَ يَشْبَعُ، الْيَدُ الْعُلْيَا خَيْرٌ مِنَ الْيَدِ السُّفْلَى



www.sunnathwaljamath.com

'ஹகீமே! நிச்சயமாக இச்செல்வம் பசுமையானதும் இனிமையானதுமாகும். இதைப் போதுமென்ற உள்ளத்துடன் எடுத்துக் கொள்கிறவருக்கு இதில் அபிவிருத்தி ஏற்படுத்தப்படும்; இதைப் பேராசையுடன் எடுத்துக் கொள்கிறவருக்கு அதில் அபிவிருத்தி ஏற்படுத்தப்படாது. அவன் உண்ட பின்பும் வயிறு நிரம்பாதவன் போலாவான். உயர்ந்த கை தாழ்ந்த கையைவிடச் சிறந்தது" எனக் கூறினார்கள். நான், “இறைத்தூதர் அவர்களே! உங்களைச் சத்தியத்துடன் அனுப்பி வைத்தவன் மீது ஆணையாக! உங்களுக்குப் பின் உலகைப் பிரியும் வரை வேறு யாரிடமும் நான் எதையும் கேட்க மாட்டேன்” என உறுதிபடக் கூறினேன்.

ஹஜ்ரத் அபூபக்ர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் (ஆட்சிக் காலத்தில்) ஸகாத் பெறுமாறு இந்த ஹகீமை அழைத்தார்கள். அவர் அதை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். பிறகு ஹஜ்ரத் உமர் இப்னு கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் (தம் ஆட்சியில்) ஸகாத் பெறுமாறு அவரை அழைத்தார்கள். அவர் எதையும் ஏற்க மறுத்தார். அப்போது ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், “முஸ்லிம் சமுதாயமே! தம் உரிமையைப் பெறுமாறு நான் ஹகீமை அழைக்கிறேன். அவரோ அதைப் பெற மறுக்கிறார். இதற்கு நீங்கள் சாட்சி!' எனக் கூறினார்கள். ஹகீம் இப்னு ஹிஸாம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின் வேறு யாரிடமும் தாம் மரணிக்கும் வரை எதையும் கேட்கவேயில்லை என ஸயீத் இப்னு அல் முஸய்யப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.(متفق عليه )

அதாவது இந்த ஸஹாபி யாரிடமும் யாசகம் கேட்கவில்லை, எனவே அல்லாஹ் அவர்களை பொருந்திக் கொண்டான். அதிகமாக ஆசைப்படுவதை விட்டு தனது எண்ணத்தை இந்த சஹாபி தூய்மைப்படுத்திக் கொண்டார். எனவே யாருக்கு இவ்வாறு போதுமென்ற நேர்மையான எண்ணம் வளர்கிறதோ நிச்சயம் அவர் உயரிய கௌரவத்தை பெறுவார்.

இவ்வாறுதான் ஒருவர் தான் சம்பாதிப்பவற்றிலும் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும், எனவே தடுக்கப்பட்டவைகளை விட்டும், சந்தேகத்திற்குரியதை விட்டும் மிக கவனமாக விலகி இருக்க வேண்டும். அதற்கு முதலில் போதுமென்ற மனநிலையை வளர்த்துக் கொள்ள வேண்டும். இந்த மனநிலை மிகவும் பொக்கிஷமான மனநிலையாகும். இந்த மனநிலையை பெற்றவருக்கு அழிவே இல்லை. காரணம் போதுமென்ற மனம் படைத்தவரே தொடர்ந்து தான தர்மங்கள் செய்து கொண்டே இருப்பார்.

போதுமென்ற மனம் உள்ளவருக்கு சில காரணங்களால் ஏதேனும் உலகியல் பொருள் ஒன்று கிடைக்காவிட்டாலும், தன்னிடம் உள்ள மற்ற பொருட்களை போதுமென்று கருதிக் கொண்டு மனம் திருப்தியடைந்து கொள்வார். ((114/4) :النهاية في غريب الحديث والأثر)

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

أَيُّهَا النَّاسُ اتَّقُوا اللَّهَ وَأَجْمِلُوا فِي الطَّلَبِ، فَإِنَّ نَفْسًا لَنْ تَمُوتَ حَتَّى تَسْتَوْفِيَ رِزْقَهَا وَإِنْ أَبْطَأَ عَنْهَا، فَاتَّقُوا اللَّهَ وَأَجْمِلُوا فِي الطَّلَبِ، خُذُوا مَا حَلَّ، وَدَعُوا مَا حَرُمَ

“மனிதர்களே! அல்லாஹ்விற்கு அஞ்சி நடங்கள், நிதானமான முறையில் வாழ்வியல் ஆதாரங்களை தேர்ந்தெடுங்கள். ஏனெனில் எந்த உயிரும் அதற்கு கிடைக்க வேண்டிய ஒதுக்கீடு கிடைக்காத வரை மரணிப்பதில்லை, அது மிக மெதுவாக வந்தபோதிலும் சரியே. எனவே அல்லாஹ்விற்கு அஞ்சி நடங்கள். நிதானமான முறையில் வாழ்வியல் ஆதாரங்களை தேடுங்கள். ஆகுமாக்கப்பட்டதை மட்டுமே எடுத்துக்கொள்ளுங்கள். தடுக்கப்பட்டவைகளை தவிர்த்துவிடுங்கள். (2144 : ابن ماجه)

**முஃமீன்களே**! தூய்மையாக இருப்பதும் நேர்மையின் ஓர் அங்கம்தான். அதாவது உடலையும் எண்ணங்களையும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். சிறு சிறு குறைகளை பெரிதாக கற்பனை செய்து கவலைப்படும் மனநிலையை அகற்றி எண்ணத்தை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். இந்த தூய்மையில் மிகவும் முக்கியமான மற்றும் அவசியமான தூய்மை பேராசையிலிருந்து மனதை தூய்மைப் படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது கீழ்த்தரமான எண்ணம், பொறாமை, கசப்புணர்வு, காழ்புணர்ச்சி போன்றவற்றை விட்டு நம் உள்ளத்தை தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹுூ அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்வாறான தீய எண்ணங்களை பற்றி மிகவும் எச்சரித்து கூறுகிறார்கள். நமது எண்ணங்களை மிகவும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அறிவுரை கூறுகிறார்கள். இத்தகைய மன நோயை பற்றி விளக்கமாக கூறி அதற்குரிய நிவாரணத்தை பெரும் ஆலோசனைகளையும் இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹுூ அலைஹி வஸல்லம் அவர்கள் மிகவும் தெளிவாக எடுத்துக் கூறுகிறார்கள்:

دَبَّ إِلَيْكُمْ دَاءُ الأُمَمِ قَبْلَكُمْ: الْحَسَدُ وَالْبَغْضَاءُ هِيَ الْحَالِقَةُ، لاَ أَقُولُ تَحْلِقُ الشَّعْرَ، وَلَكِنْ تَحْلِقُ الدِّينَ، وَالَّذِي نَفْسِي بِيَدِهِ لاَ تَدْخُلُوا الْجَنَّةَ حَتَّى تُؤْمِنُوا، وَلاَ تُؤْمِنُوا حَتَّى تَحَابُّوا، أَفَلاَ أُنَبِّئُكُمْ بِمَا يُثَبِّتُ ذَاكُمْ لَكُمْ، أَفْشُوا السَّلاَمَ بَيْنَكُمْ

“உங்களுடைய முந்தைய சமூகத்தாரிடம் இருந்து உங்களிடையே (சில) வியாதிகள் ஊடுருவியுள்ளன. (அவை) பொறாமைக் குணமும், காழ்ப்புணர்ச்சியுமாகும். அவைகள் முழுமையாக மழித்துவிடும். அவை முடிகளை மழித்துவிடும் என்று நான் கூறமாட்டேன், ஆனால் மார்க்கத்தையே மழித்துவிடும். எவனுடைய கரங்களில் எனது உயிர் இருக்கிறதோ அவன் மீது சத்தியமாக நீங்கள் இறை நம்பிக்கை கொள்ளாதவரை சுவனத்திற்குள் செல்ல மாட்டீர்கள். உங்களை நீங்கள் ஒருவருக்கொருவர் நேசிக்காதவரை நீங்கள் இறைநம்பிக்கை கொண்டவர்களாக மாட்டீர்கள். அந்த தன்மை உங்களிடம் எப்படி ஏற்படும் என்பதை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா? உங்களுக்கிடையில் நீங்கள் ஸலாம் சொல்வதை பரப்புங்கள்”(2510 : الترمذي )

**தொழுகையாளிகளே**! தனிப்பட்ட முறையிலும் பொதுவாழ்விலும் மிகவும் கவனமாக இந்த நேர்மையை கடைபிடிக்க வேண்டும். மிகக் குறிப்பாக பொது சொத்தில் மிகவும் கவனத்துடன் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். தமக்கு உரிமை இல்லாத அளவில் பொது சொத்தையோ, நிதியையோ அனுபவிக்க கூடாது. ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஸீஸ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் வாழ்வை நாம் படிப்பினையாக கொள்ள வேண்டும்.



www.sunnathwaljamath.com

பொதுச் சபையில் அமர்ந்து முஸ்லிம்களின் பணிகள், அரசு அலுவல்கள் மற்றும் வழக்குகளை நிறைவேற்றுவார்கள், இரவு நேரமாக இருந்தால் தீ பந்தம் கொளுத்தப்படும். இந்த பொதுப் பணிகளை முடித்த உடனே அந்த தீ பந்தத்தை அனைத்துவிடுவார்கள். தன் சொந்த வேலைகளுக்கு வெளிச்சம் தேவையெனில் தன் சொந்த விளக்கை மட்டுமே ஏற்றிக்கொள்வார்கள்.((136/5) : سير أعلام النبلاء )

அதாவது பொதுப்பணிகளுக்கு தேவையான வசதிகளை பொது நிதியில் இருந்து பயன்படுத்திக் கொள்வார்கள். அந்த பணி முடிந்த உடனேயே அந்த வசதிகளை நிறுத்திக் கொள்வார்கள். தமது சொந்த செலவிலேயே தமது தேவைகளை ஹஜ்ரத் உமர் இப்னு அப்துல் அஸீஸ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் நிறைவேற்றிக் கொள்வார்கள்.

நேர்மையாக நடப்பவரின் கடமை, தமது பொறுப்புகளை சரிவர நிறைவேற்றுவதோடு நிறைவடைந்து விடாது, அநாவசியமாக ஏற்படும் செலவுகளை தடுப்பதும், தடை செய்யப்பட்ட காரியங்களை செய்யாமல் பாதுகாப்பதும் ஒரு நேர்மையான தலைமைக்கு அழகு. எனவே தன்னளவில் யாரிடமும் கையூட்டு பெறாமல் இருப்பதோடு தன்னைச் சார்ந்தவர்களும், தனக்கு கீழ் பணி செய்பவர்களும் கையூட்டு பெறுவதை கண்காணித்து உரிய நேரத்தில் தடுக்க வேண்டும்.

கைபர் பகுதியில் உள்ள விளைச்சலில் இருந்து கிடைக்கும் பழங்களை மதிப்பீடு செய்து சரி சமமாக பிரித்துக் கொடுப்பதற்காக இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அப்துல்லாஹ் இப்னு ரவாஹா ரலியல்லாஹு அன்ஹு அவர்களை நியமித்தார்கள். அப்துல்லாஹ் இப்னு ரவாஹா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அந்த கைபர் பகுதிக்கு சென்று மகவும் துல்லியமாக கணக்கெடுத்துக் கொண்டிருந்தார்கள். அங்கிருந்த யூதர்கள் தங்கள் வீட்டு பெண்களிடம் இருந்த தங்க நகைகளை வாங்கி, அவற்றை ஒன்றாக சேர்த்து இந்த ஸஹாபியிடம் தரும்போது, “இந்த நகைகளை வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் மிக துல்லியமாக மதிப்பீடு செய்ய வேண்டாம், எங்களுக்கு சாதகமாக கணக்கில் சலுகை காட்டுங்கள்” என்று கோரிக்கை வைத்தார்கள். அப்போது அப்துல்லாஹ் இப்னு ரவாஹா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், “**நீங்கள் எனக்கு தருவது கையூட்டாகும், இது முற்றிலும் தடைசெய்யப்பட்டதாகும். நாங்கள் இப்படிப்பட்ட வருவாயை உட்கொள்வதில்லை**” என்று மிக கண்டிப்புடன் கூறிவிட்டார்கள். அப்போது அந்த மக்கள், “ஆம் இதனால்தான், இந்த நேர்மையால்தான் இந்த வானம் பூமி நிலைத்திருக்கிறது” என்று சொன்னார்கள்.(1389 : الموطأ )

மனிதர்களுக்கு கெடுதி ஏற்படுத்தும் பொருட்களை விற்காமல் இருப்பதும் ஒரு நேர்மையான வியாபாரிக்கு அழகு. அதிக இலாபத்தை மட்டுமே இலக்காக கொள்ளக்கூடாது. நல்லடியார்களையும், நேர்மையான மற்றும் உண்மையான வியாபாரிகளையும் படிப்பினையாக கொண்டு வணிகம் செய்ய வேண்டும். அவ்வாறு வியாபாரம் செய்யும் போது இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்த்துச் செய்திக்கு தகுதி பெற முடியும்:

التَّاجِرُ الأَمِينُ الصَّدُوقُ الْمُسْلِمُ مَعَ الشُّهَدَاءِ يَوْمَ الْقِيَامَةِ

“உண்மையான நம்பிக்கையான முஸ்லிமான ஒரு வியாபாரி நாளை மறுமை நாளில் ஷஹீத்(எனும் உயிர்த்தியாகி)களோடு இருப்பார். (2139 : ابن ماجه)

வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் நேர்மையை கடைபிடிக்க வேண்டும். எந்த நிலையிலும் ஒருவர் தூய மனதுடன் பற்றற்ற மனநிலையை வளர்த்துக் கொள்ள வேண்டும். யா அல்லாஹ் எங்கள் உள்ளங்களை நீ தூய்மைப்படுத்துவாயாக! எங்கள் எண்ணங்களை அழகாக்குவாயாக!! நாங்கள் நேர்மையாக வாழும் பாக்கியத்தை தருவாயாக!!!

**தொழுகையாளிகளே**! இறைவனுக்கு அஞ்சி நடக்க வேண்டும், இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறைகளை பின்பற்றி வாழ வேண்டும், ஒவ்வொரு நிலையிலும் நேர்மையாக நடக்க வேண்டும் என்பதே நாம் ஒருவருக்கொருவர் செய்யும் முதல் அறிவுரையாக இருக்கிறது. எனவே நாம் நமது எண்ணங்களையும், ஆசைகளையும், உள்ளங்களையும், உடல் உறுப்புகளையும் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். தூய்மையாகவும் உண்மையாகவும் இருந்து நமது அகத்தையும் புறத்தையும் இலட்சணமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

எனவே கீழ்த்தரமான வார்த்தைகளை பேசாமல் நமது நாவை தூய்மையாக வைத்துக் கொள்ளவேண்டும், அதே சமயம் பொய் புரட்டு, கோள், அவதூறுகளையும் நாம் பேசக்கூடாது. மன ஊசலாட்டதிலிருந்து விடுபட வேண்டும். யார் தனது எண்ணத்தை மிகவும் தூய்மையாக வைத்திருக்கிறாரோ அவரை கெட்ட எண்ணம் கொண்ட யாராலும் வசைபாடி விட முடியாது. நேர்மையான சிந்தனையே மிகவும் பாதுகாப்பானது, மிகவும் வலிமையானதாகும். எண்ணற்ற பல நன்மைகளும், பலன்களுக்கும் கிடைக்கும். அதில் மிகவும் குறிப்பிடத்தக்கது இறைவனின் திருப்பொருத்தமாகும். அடுத்ததாக போதுமென்ற மனநிலையை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பும் கிடைக்கும். அந்த மனநிலையே இம்மையிலும் மறுமையிலும் வெற்றியை பெற்றுத்தரும் மாபெரும் வழிமுறையாகும். இதனை பற்றி இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

قَدْ أَفْلَحَ مَنْ أَسْلَمَ، وَرُزِقَ كَفَافًا، وَقَنَّعَهُ اللَّهُ بِمَا آتَاهُ

“யார் முஸ்லிமாகி போதுமான வாழ்வாதாரம் வழங்கப்பட்டு, அல்லாஹ் வழங்கியதைப் போதுமெனக் கருதினாரோ அவர் (வாழ்க்கையில்) வெற்றி பெற்றுவிட்டார்”(1054 :مسلم )

நேர்மையான செயல்பாடு ஆத்ம திருப்தியை பெற்றுத்தரும். எந்த உறுத்தலும் துரத்தலும் இருக்காது, மிக நிம்மதியான தூக்கமும், ஓய்வும் கிடைக்கும். பற்றற்ற தன்மையை உருவாக்கும். இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

لَيْسَ الغِنَى عَنْ كَثْرَةِ العَرَضِ، وَلَكِنَّ الغِنَى غِنَى النَّفْسِ

“(வாழ்க்கை) வசதிகள் அதிகமாக இருப்பது செல்வமன்று; மாறாகப் போதுமென்ற மனமே (உண்மையான) செல்வமாகும்” (متفق عليه)



www.sunnathwaljamath.com

அதாவது, செல்வநிலை என்பது மிக தாராளமாக ஆடம்பர செலவு செய்வதல்ல, தேவைக்கு அதிகமாக உலக இன்பங்களை அனுபவிப்பதும் அல்ல. உண்மையான செல்வநிலை என்பது போதுமென்ற மனநிலையே ஆகும். கிடைத்த குறைவான வசதிகளை வைத்துக்கொண்டு மிக திருப்திகரமாக வாழ்வதே செல்வ நிலையாகும். நேர்மையாக நடப்பதால் ஆளுமைத்திறன் உயரும், சமூகத்தில் கௌரவம் கிடைக்கும். மரியாதை உயரும். கண்ணியமான கம்பீர தோற்றம் கிடைக்கும். பொது நலனில் நேர்மையுடன் செயல்படும்போது அதன் மூலம் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் பலன் கிடைக்கும். பல்வேறு வகையில் நன்மைகள் விளையும். குடும்பத்தினருக்கும் முன்னேற்றம் கிடைக்கும். நேர்மையாக இருப்பவர்களை அல்லாஹ் தனது பாதுகாப்பில் வைத்திருப்பான். தனது அருளால் அவர்களை மேம்படுத்திடுவான். எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (34:15)

كُلُوا مِنْ رِزْقِ رَبِّكُمْ وَاشْكُرُوا لَهُ بَلْدَةٌ طَيِّبَةٌ وَرَبٌّ غَفُورٌ

"உங்கள் இறைவன் உங்களுக்கு அருள் புரிந்தவைகளைப் புசித்துக்கொண்டு அவனுக்கு நன்றி செலுத்தி வாருங்கள். (இம்மையில்) வளமான நகரமும், (மறுமையில்) மிக்க மன்னிப்புடைய இறைவனும் (உங்களுக்கு) உண்டு"

நமது சொல்லாலும், செயலாலும், குணாதிசயங்களாலும், பொருளியியல் நடவடிக்கைகளாலும் நாம் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். இதனால் நாளை மறுமை நாளில் நம்மை சொர்க்கத்தில் நுழையச் செய்து மாபெரும் வெற்றியை இறைவன் தந்திடுவன்.

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹுு அலைஹீ வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الأَمْرِ مِنكُم

"ஈமான்கொண்ட நல்லடியார்களே ! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்"

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருப்போம்:

مَنْ صَلَّى عَلَيَّ صَلاَةً صَلَّى اللَّهُ عَلَيْهِ بِهَا عَشْراً

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: "யார் என் மீது ஒரு முறை ஸலவாத் சொல்லுகிறார்களோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் சொல்லுகிறான்" (முஸ்லிம் : 384 )

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹுுஅலைஹீ வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின்

மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும் ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!, மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹூ அன்ஹூம் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக.!!!

யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்கக்கூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள் தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!!


www.sunnathwaljamath.com

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்!

யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக, நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!



www.sunnathwaljamath.com

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக!

யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).



www.sunnathwaljamath.com